பக்கங்கள்; ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆடி 30 செவ்வாய்க்கிழமை (15-08-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 263

## மட்டக்களப்பில் புலிகளின் அதிரடியில் அதிகாரியும் 5 படையினரும் பலி!

யாழ்ப்பாணம், ஓக. 15

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுக் காலை 10 மணியளவில் ஓமடியாமடு என்ற சிங்களக் குடியேற்றக் கிராமத்துக்கு பாதுகாப்பு வழங்கச் சென்றுகொண்டிருந்த ஸ்ரீலங்கா இராணுவ அணி மீது விடுதலைப்புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் ஒரு அதிகாரி உட்பட ஆறு படையினர் உயிரிழந்தனர். ஏனையோர் காயங்களுடன் தப்பி ஓடினர்.

பன்னிரண்டு நிமிட நேரம் நீடித்த இத் தாக்குதலின் போது தமக்கு இழப்பு ஏதுமின்றி படையினரின் ஆயுதங்களைப் புலிகள் கைப்பற்றினர் அவற்றின் விவரம் வருமாறு:-

60 மி. மீ. மோட்டர் —1, அதற்குரிய வைபோட் — 1, பேஸ் பிளேட் — 1, ஷெல்கள் — 2, ஏ. கே. ரக துப்பாக்கிகள் — 6, ஏ. கே. ரக

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 3 நாட்களில் 564 தமிழர் கொழும்பில் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 15

கடந்த வியாழக்கிழமை முதல் சனிக்கிழமை வரையான மூன்று நாட்களில் கொழும்பிலும் அதன் சுற்றுப் பிரதேசங்களிலும் 564 தமிழர்கள் படையினரால் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

வியாழக்கிழமை மட்டும் 80 பேர் கைது செய்யப்பட்டனர்.

வெள்ளி, சனி நாட்களில் 484 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் 84 பேர் முகத்துவாரத்தில் கைது செய்யப்பட்டனர். [உ-3]

# பாட்டாளி மக்கள் கட்சி கச்சதீவில் இன்று இந்தியக்கொடி ஏற்ற முயற்சி!

## அதைத் தடுத்து நிறுத்துவதற்காக ஸ்ரீலங்கா படைகள் அங்கு விரைவு

சென்னை, ஓகஸ்ட் 15

இந்திய சுதந்திரதினமான இன்று திட்டமிட்டபடி கச்சதீவுக்கு படகுகளில் சென்று அங்கு இந்தியக்கொடியை ஏற்றப்போவதாக பாட்டாளி மக்கள் கட்சி சூளுரைத்திருக்கிறது.

இதனைத் தடுத்து நிறுத்துவதற்காக ஸ்ரீலங்கா கடற்படையினரும், இராணுவத் துருப்புகளும் கச்சதீவுக்கு அனுப்பப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கை — இந்திய கடல் எல்லைப் பிரதேசத்தில் உள்ள சர்ச்சைக்குரிய கச்சதீவு — 1974 ஆம் ஆண்டு அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி, இலங்கைப் பிரதமர் சிறிமாவோ ஆகியோருக்கு இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை அடுத்து — இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்டது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கச்சதீவு வர முயல்வோரை தடுக்க இந்தியப் படை தயார்

சென்னை, ஓக. 15

கச்சதீவுக்கு பாட்டாளி மக்கள் கட்சித் தொண்டர்கள் படகுகளில் ஊர்வலமாகச் செல்ல முயற்சிப்பதைத் தடுப்பதற்காக தமிழக தெற்கு கடற்கரையோரங்களில் இந்தியத் துருப்புகள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

கச்சதீவை மீண்டும் இந்தியாவுக்குச் சொந்தமாக்க தாம் முயற்சி எடுப்பதாக தமிழக முதல்வர் ஜெயலலிதா முன்னர் பல தடவைகள் கூறி வந்த போதிலும், இன்று பாட்டாளி மக்கள் கட்சி நடத்தும் போராட்டத்துக்கு எதிராக அவர் செயற்படுகிறார் என்று பி. பி. ஸி. தெரிவித்தது.

கச்சதீவுக்குச் செல்ல முயற்சிக்கும் பாட்டாளி மக்கள் கட்சியினருக்கு படகுகளை வழங்க வேண்டாம் என்று தமிழக மீனவர்களை தமிழக அரசு எச்சரித்துள்ளது.

(உ-3)

## உணவுப் பொருள்களின் கையிருப்பு இந்த வாரத்துடன் முடிந்துவிடும்

### செயலகத்தின் ஊடான விநியோகம் ஸ்தம்பிக்கும்

யாழ்ப்பாணம், ஓக. 15

யாழ். செயலகத்தின் பொறுப்பில் உள்ள உணவுப் பொருள் கையிருப்பு இவ்வார இறுதியுடன் முடிந்து விடும் என்று செயலக அதிகாரிகள் நேற்றுத் தெரிவித்தனர்.

யாழ். செயலகத்தின் பொறுப்பில் இருந்த உணவுப் பொருள்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இதுவரை விநியோகிக்கப்பட்டு வந்ததாகவும்—

இவ்வார இறுதியுடன் சகல பொருள்களின் கையிருப்புக்களும் விநியோகித்து முடிந்துவிடும் எனவும் — தெரிவிக்கப்பட்டது.

இந்த வாரத்தில் கொழும்பில் இருந்து உணவுக் கப்பல்கள் வராவிட்டால், செயலகத்தின் ஊடாக நடைபெறும் உணவுப்பொருள் விநியோகம் ஸ்தம்பிதநிலை அடையும் நெருக்கடி நிலை தோன்றியுள்ளது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பாணுக்கு தட்டுப்பாடு உடனடியாக வராது

யாழ்ப்பாணம், ஓக. 15

செயலகத்தின் உணவுக் கையிருப்பு முடிவடைந்தாலும் பாண் உற்பத்திக்கு மா வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதனால் பாணுக்கு உடனடியாகத் தட்டுப்பாடு உண்டாகமாட்டாது என்று செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

தற்போது கையிருப்பில் உள்ள மா பாண் தயாரிப்பதற்கு மட்டுமே வழங்கப்படும் என்றும்—

ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் பங்கீட்டு அடிப்படைக்கு மா வழங்கப்படமாட்டாது எனவும் — தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை குத்தரிசி, சிவப்புப் பச்சை, வெள்ளைப் பச்சை அரிசி வகைகள் வெளிச்சந்தையில் விற்பனையில் இருப்பதாக அறியவருகிறது. (அ-3]

## ★ செஞ்சிலுவைப் பாதுகாப்புடன்

## வடக்கே கப்பல் அனுப்புவது குறித்து வார இறுதிக்குள் சாதகமான முடிவு?

யாழ்ப்பாணம், ஓக. 15

வடக்கே வரும் கப்பல்களுக்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு பாதுகாப்பு வழங்கும் விவகாரம் குறித்து இவ்வார இறுதிக்குள் முடிவு தெரியவரும் என்று அறிய வந்தது.

வடக்கே வரும் உணவுக் கப்பல்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் பணியை நிறுத்தி வைத்துள்ளமை குறித்தும் —

அந்தப்பணியை மீண்டும் ஆரம்பிப்பதற்கு வழியாக ஸ்ரீலங்கா அரசு — விடுதலைப் புலிகள் — செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு ஆகிய முத்தரப்புக்கும் இடையில் புதிய உடன்பாடு ஒன்றை ஏற்படுத்துவது குறித்தும் —

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் கொழும்பு அலுவலக அதிகாரிகளுக்கும், பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுக்கும் இடையில் நேற்று பேச்சுக்கள் இடம்பெற்றதாகத் தெரியவந்தது.

நகல் உடன்பாடு இச்சந்திப்பின் போது பரிசீலிக்கப்பட்ட

(5 ஆம் பக்கம் பார்க்க)

## 8,000 தமிழர் நேற்று சுவிஸில் பேரணி!

லண்டன், ஓக. 15

ஸ்ரீலங்கா அரசின் தமிழ் இனப் படுகொலை நடவடிக்கைகளைக் கண்டித்தும் அதை நிறுத்தக் கோரியும்—

தமிழ் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கக் கோரியும் —

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமே தமிழீழ மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்ற கோரிக்கையை அங்கீகரிக்கக் கோரியும் — சுவிஸ் தலைநகர் ஜெனிவாவில் நேற்று பிரமாண்டமான பேரணி ஒன்று ஐ.நா. அலுவலகம் முன்பாக நடத்தப்பட்டது.

சுவிஸ் தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு, கத்தோலிக்க ஆன்மீக பணியகம், சைவத் தமிழ்ச் சங்கம் ஆகிய அமைப்புக்கள் கூட்டாக ஏற்பாடு செய்த இந்த பேரணியில் சுமார் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர் பங்கு பற்றினர்.

சிறுபான்மை இனத்தவரைப் பாதுகாப்பது பற்றிய ஐ. நா. துணைக் குழுவின் 47 ஆவது ஆண்டுக் கூட்டம் ஜெனிவாவில் நடைபெறுவதை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## றோயல் இன்டஸ்றீஸ்

ஸ்தாபனத்தாரின்

உற்பத்திப் பொருள்கள் அனைத்தும்
தட்டுப்பாடின்றிப் பெற்றுக்கொள்ள

## சிவா நறுமணப் பூங்கா

உங்களை அழைக்கின்றது - - - - - -

★ றோயல் றோஸ் டல்க்கம் பவுடர்
★ தீபா றோஸ் டல்கம் பவுடர்
★ றோயல் பேக்கிங் பவுடர்
★ றோயல் அறோறூட் பவுடர்
★ றோயல் ஜிஞ்சர்
★ றோயல் நீலம்
★ மற்றும் மென்பானத் தயாரிப்புப் பொருள்கள்
★ ஐஸ்கிறீம் தயாரிப்புப் பொருள்கள்
★ பேக்கரிக்குரிய அனைத்துப் பொருள்கள்
★ பிஸ்கட், றொபி, நெய் வகைகள்
★ டல்கம் பவுடர் (சொறி)
★ தோலிகாய்த் திருவல் உகர்த்தியது
★ சிற்றவிகோ எமசென் மற்றும் பலவற்றிற்கும்

## சிவா நறுமணப் பூங்கா

288, கேணல் கிட்டு சாலை,
(ஆஸ்பத்திரி வீதி),
யாழ்ப்பாணம்.

(சி- 2056)


## நல்லூர் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஒக. 15

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தின் பதினைந்தாம் நாள் திருவிழாவான இன்று ஆலயச் சூழலில் நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள்:

★ நாவலர் மணிமண்டப முன்றிலில் மாலை 6 மணி முதல் 7மணிவரை கனகாம்பரி பத்மநாதன் பாட்டு 7 மணி முதல் 8-30 மணிவரை திரு. எஸ்.பாலசிங்கம்பாட்டு.

★ நல்லை ஆதீன கலா கலா மண்டபத்தில் — சைவ சமய பயிற்சி நெறி வகுப்புகள் காலை 8-30 மணி தொடக்கம் 12 மணிவரை நடைபெறும்.
பண்டிதர் மு.கந்தையா ''சைவ சாதன விளக்கம்'' திரு மா. வேதநாதன் [விரிவுரையாளர்] ''காவடி வழிபாட்டில் பெறும் பங்கு'.

★ நல்லைஆதீனகுருமூர்த்த மண்டபத்தில்பி.ப. 3மணிக்கு சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கத்தின் சமயப் பேருரை ''திருவாசகம்''

★ மேற்கு வீதி ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் மாலை 5-30 மணிக்கு பிரம்ம ஸ்ரீவை. நித்தியானந்த சர்மாவின் ''விஷ்ணு பாகவதம்'' தொடர் இசைப் பேருரையில்''பரசுராமன்'.

[ஒ-30-111]

## ஸ்ரீமாவின் மாளிகையையும் அதிரவைத்த குண்டு!

### அனுராவை எச்சரித்தார்

கொழும்பு, ஒக. 15

சுதந்திர சதுக்கத்தில் குண்டு வெடித்தபோது றோஸ்மீட் மாளிகை வரை அதிர்ச்சி ஏற்பட்டதாம்.

குண்டு வெடிப்புச் சத்தத்தைக் கேட்ட பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக தனது வீட்டு பல்கனிக்குச் சென்று பார்த்தார். மகள் அனுரா அயலில் உள்ள வீட்டுப் பல்கனியில் நிற்பதைக் அவர் கண்டார்.

''மேலும் பல குண்டுகள் வெடிக்கலாம், வெளியே போக வேண்டாம்'' என்றுமகள் அனுராவை எச்சரித்தார் என்று 'சண்டே லீடர் ஆங்கில வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது. (இ-க)

## ஒற்றையாட்சி முறையை மாற்ற லலித் பிரிவு எதிர்ப்பு

நாட்டின் ஒற்றையாட்சி அமைப்பு முறையை மாற்றுவதற்கான அரசாங்கத்தின் எந்த முயற்சியையும் தாம் எதிர்ப்பதாக ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணியின் லலித் பிரிவு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்குச் சமர்ப்பித்த மகஜரில் தெரிவித்துள்ளது. (இ-க)

## பொது இடங்களில் தோன்றாதீர்!

## அரசுப் பிரமுகர்களுக்கு படையினர் ஆலோசனை

கொழும்பு, ஒக. 15

விடுதலைப் புலிகளின் தற்கொலைத் தாக்குதல்களுக்கு அரசுத் தலைவர்கள் இலக்காகலாம் என அஞ்சப்படுவதால்—

பொது இடங்களில் பாதுகாப்பின்றி தோன்ற வேண்டாம் என அரசுத் தலைவர்களுக்கு பாதுகாப்புத் துறையினர் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

'வெரித்தாஸ்' வானொலி இத்தகவலை வெளியிட்டது.

அண்மையில் இளநீர் வண்டியில் எடுத்துச் செல்லப்பட்டு கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் வெடிக்க வைக்கப்பட்ட குண்டு, அவ்வழியே வாகன அணியில் செல்லும் முக்கிய அரசுப் பிரமுகர் ஒருவரைத் தாக்குவதற்கு இலக்கு வைத்தே தயாரிக்கப்பட்டிருந்ததாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் குறிப்பிட்டன. (உ 6)


தனியார் கல்வி நிறுவனங்களுக்கான

## விசேட பொதுக்கூட்டம்

**வலிகாமப் பிரிவினருக்கு**
[யாழ். மருதனார்மடம், பண்டத்தரிப்புக் கோட்டம்]
இடம்: நியூ மாஸ்ரர் கல்வி நிலையம் [எழிலகத்திற்கு அருகில்]
காலம்: 16 - 08 - 95 (புதன்கிழமை) காலை 10.00 மணி

**தென்மராட்சிப் பிரிவினருக்கு:**
இடம்: அமிர்தாம்பிகை வித்தியாலயம், கண்டி வீதி, சாவகச்சேரி.
காலம்: 16 - 08 - 95 (புதன்கிழமை) பி. பகல் 2.00 மணி.

**வடமராட்சிப் பிரிவினருக்கு:**
இடம்: சதா பொன்ஸ் கல்வி நிலையம்
காலம்: 16 - 08 - 95 [புதன்கிழமை] பி. பகல் 4.30 மணிக்கு

விடயம்:
தமிழீழ தேசிய பாதுகாப்பு நிதி சேகரிப்பு தொடர்பான கலந்துரையாடல்

குறிப்பு:
மேற்படி கூட்டத்திற்கு நிறுவன உரிமையாளர்கள், பிரத்தியேக வகுப்பு ஆசிரியர்கள், நிர்வாகிகள், ஆசிரியர்கள், ஊழியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொண்டு ஒத்துழைக்குமாறு மிகவும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

★ நன்றி ★

தனியார் கல்வி நிர்வாகப் பிரிவினர்

(சி/ 2054)



## கம்பியூட்டர் கல்வி

20 - 08 - 95 நடைபெறவிருக்கும் பொதுக் கணனிப் பரீட்சைக்கான ஆயத்த வகுப்பு ஒன்று 17-8-95 வியாழக்கிழமை காலை 9மணிக்கு எமது நிறுவனத்தில் நடைபெறவுள்ளது. விரும்பியவர்கள் முற் கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

UNIKCO COMPUTER CENTRE,
37, CLOCK TOWER ROAD,
JAFFNA.

[சி/2053]


## புலிகளின் குரல் வானொலியில்

**15 – 08 – 1995**

**செவ்வாய் இரவு**

★ 8-02 — ஊர்சுற்றும் ஒலிவாங்கி
★ 8-10 — அறிந்து கொள்ளுங்கள்.
★ 8-20 — நலந்தானா — திருவிழாக் காலங்களில் ஏற்படும் சுகாதாரப் பிரச்சினைகளும் அதற்கான ஆலோசனைகளும்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 —கருத்துக்களம்— இ.இராஜேஸ்வரன் எழுதிய ''கிணறும் தவளையும்'
★ 8-50 — மலரும் மொட்டுக்கள்

**16 – 08 – 1995**

**புதன் காலை**

★ 7-02— மாவீரவணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள் தொடர்ந்து நீங்கள் கேட்டவை

## தமிழீழ வானொலியில்

**செவ்வாய் மாலை**

★ 5-01—சிந்தனைச்சிதறல்
★ 5-02 — எழுச்சிகீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — தமிழிசை
★ 5-30—வானொலி மதியூகம்
★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
★ 6-02 — என் தெரிவு
★ 6-10 — செய்திகள்
★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
★ 6-20 — இவ்வாரம் இவர்.

## 2 போராளிகள் இணைப்பு

யாழ்ப்பாணம், ஒக. 15

புத்தூர் மேற்கு நவக்கிரியைச் சேர்ந்த ம. இராசா என்பவர் தனது மகள் இராசா இராசலக்ஷ்சுமி[வயது 17] என்பவரையும், குட்டிளானைச் சேர்ந்த செல்லக்குட்டி சியதா என்பவரை அவரது சகோதரனும் புதிய போராளிகள் இணையும் ஊரெழு செயலகத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு இணைத்துள்ளார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## போர்க்கால முதலுதவி பயிற்சி வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஒக. 15

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் மகளிர் பிரிவினரால் மாணவர்களுக்கான போர்க்கால முதலுதவி பயிற்சி வகுப்புக்கள் இன்றும், நாளையும் நடத்தப்படவிருக்கின்றன. விவரம் வருமாறு:-

இன்று

★ காலை11 மணிக்கு:- சி. சி. ஏ. கல்வி நிலைய மாணவர்களுக்கு

★ காலை 10 மணிக்கு:- பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் இந்து மகளிர் கல்லூரி, பெரியபுலம் மாணவர்களுக்கு—

★ காலை 10.30மணிக்கு:- ஸ்ரீபார்வதி வித்தியாலயத்தில் கனகரத்தினம் ம. ம. வி. ஸ்ரீபார்வதி வி. மாணவர்களுக்கு

நாளை

★ காலை 9.30 மணிக்கு:- புனித மரியாள் பாடசாலையில் வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். கன்னியர்மடம், திருக்குடும்ப கன்னியர்மடம் ம. வி மாணவிகளுக்கு

★ மாலை 3 மணிக்கு புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம், புங்குடுதீவு ம. வி. மாணவர்களுக்கு—

இந்த பயிற்சி வகுப்புக்கு பதிவு செய்த மாணவர்களையும், ஏனைய பாடசாலை மாணவர்களையும் பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது. [உ-3]

## விசேட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக. 15

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், அரச சபைகள், கூட்டுறவுச் சங்கங்கள் என்பவற்றைச் சேர்ந்த பணியாளர்கள் மற்றும் பொது அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் என்போருக்கான விசேட கலந்துரையாடல் தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் நாளை புதன்கிழமை காலை 10 00 மணிக்கும் —

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மேற்படி பணியாளர்கள், பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல் அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்துக்குப் பதிலாக கரவெட்டி திரு இருதயக் கல்லூரியில் நாளை பிற்பகல் 3-00 மணிக்கும் — நடைபெறும்.

பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெறும் மேற்படி கலந்துரையாடலில் வடமராட்சியைச் சேர்ந்த சட்டத்தரணிகள், நொத்தாரிசுகள் ஆகியோரையும் தவறாது பங்குபற்றுமாறு தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (இ)

## லியோ கழக நிர்வாகிகளுக்கு

யாழ்ப்பாணம்,ஒக. 15

நல்லூர் லயன்ஸ் கழகப் பிரிவுக்கு உட்பட்ட லியோ கழகங்களின் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள் ஆகியோரை இன்று முற்பகல் 11-00 மணிக்கு யாழ்ப்பாணம் இல. 122, மின்சார நிலைய வீதியில் உள்ள திருமாட்டி நிலையத்தில் லயன்ஸ் கழக பொருளாளர் லயன் த. சற்குணராஜாவைச் சந்திக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (உ)

## முகாமைத்துவ மாணவர் கருத்தரங்கு

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ மாணவர் மன்றத்தின் ஏற்பாட்டில் 'மன அழுத்தத்தை முகாமை செய்தல்' என்ற தலைப்பிலான கருத்தரங்கு நாளை புதன்கிழமை பிற்பகல் 2-30மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

முகாமைத்துவத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. தே. ஜெயராமன் கருத்துரை வழங்குவார். (இ)


## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன்
திரு. து. சிவகுமார் அவர்களின்
அன்புச் சகோதரி

**செல்வி து. சிறிபத்மாவதி அவர்கள்**

காலமானதையிட்டு அவரது பிரிவால் துயருறும் சிவகுமாருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

14 ஆம் அணி மாணவர்கள்
மருத்துவபீடம்

(38041)

# சில்லாலை கதிரைமாதா ஆலய உற்சவ சிறப்பிதழ்

## சில்லையூரின் பாதுகாவலி




''எல்லாத் தலைமுறைகளும் என்னைப் பேறுடையாள் எனப் போற்றும்''

[38037]

## இயம்புதற் கரிய அற்புத அன்னையே!

சில்லையூரைச் சீரொடாளும் தேவன் மகளே
எல்லையில்லா அற்புதத்தாள் தேவசுதன் தாயாரே
எல்லையூரில் எமைக்காக்கும் தலைமுறைகள் தாயாரே
தொல்லை வினை தீர்க்கும் எம் காவல் ஆனவளே
ஆகாய முட்ட மேவும் ஆலயத்தில் உறைபவளே
மேலாய வல்லமத்து கதிரையிலே இருப்பவளே
பூலோக மேலோக ராணியான
திருநாளில் திளைக்கின்றோம்
திருப்பலி தான் இங்கு இல்லை - ஆவணி 15
திருநாள் திரு நாள் தான்
உன் பாதம் சூழ நாங்கள் வாழ
நாளை விரைவில் தாரும் தாயே



# மக்கள் விரும்பினால் மாத்திரமே தீர்வுத் திட்டம் நடைமுறைக்கு

## ரத்வத்த சபையில் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 15

மக்கள் விரும்பினால் மாத்திரமே இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அரசு முன்வைத்துள்ள தீர்வுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் எனப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மேலும் பேசுகையில் —

இது ஒரு முன்யோசனை மாத்திரமேயன்றி தீர்வு அல்ல என்றும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:

இத் தீர்வுத் திட்டம் குறித்து அபிப்பிராயங்களைத் தெரிவிக்க மக்களுக்குப் பூரண சுதந்திரம் உண்டு. அரசு விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஆரம்பித்துள்ள போர்த் திட்டத்தை வெளியிட்டு எதிர்க்கு ஆயுதங்களை வழங்க நான் தயாரில்லை இராணுவ அதிகாரிகளிடையே எதுவித கருத்து வேறுபாடுகளும் இல்லை. அவர்கள் ஒருமனதுடன் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

வெளிநாடுகள் பல ஸ்ரீலங்காவுக்கு ஆயுதங்களை வழங்க முன்வந்துள்ளன. நாங்கள் ஆயுதங்களுக்கான பணத்தை செலுத்தினாலும் அந்த நாடுகள் எமக்கு ஆயுதங்களை வழங்க முன்வந்தமை பாராட்டப்பட வேண்டிய விடயம்.

கடந்த 12 வருடகாலமாக நடந்து வரும் இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வர இராணுவத்தில் உள்ள ஒரு சிறிய பிரிவினர் விரும்பவில்லை.

அவர்கள் கொழும்பில் இருந்து சுகபோகங்களை அனுபவிக்க விரும்புவதால் நாட்டில் சமாதானம் ஏற்படுவதை விரும்பவில்லை.

இவ்வாறு அவர் தெரிவித்தார். [ஒ-எ-10]

## பண்டிதர் தேர்வில் சித்திபெற்றோர்

யாழ்ப்பாணம், ஓக. 15

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை 1995 ஆம் ஆண்டு வைகாசி மாதம் நடத்திய சித்தாந்த பிரவேச பண்டிதர் பால பண்டிதர் பண்டிதர்தேர்வில் சித்தி பெற்றோர் விவரம்:-

சித்தாந்த பிரவேச பண்டிதர் திரு. செல்லையா சிவபாதம் [3 ஆம் பிரிவு) செல்வி தவமலர் சின்னத்துரை (3 ஆம் பிரிவு]

சித்தாந்த பால பண்டிதர் செல்வி. விமலரஞ்சினி மயில்வாகனம், [3 ஆம் பிரிவு) திரு. வல்லிபுரம் தயாபரசிவம் (3 ஆம் பிரிவு)

சித்தாந்த பண்டிதர் திரு. கனகசபாபதி நாகேஸ்வரன் (2 ஆம் பிரிவு) திருமதி ஜெயபாலன் கலாயாணி (3 ஆம் பிரிவு) திரு. குமாரசுவாமி துரைராசா (3 ஆம் பிரிவு). (க)

## கம்பஹா மாவட்ட தலைவராக அனுரா

அனுரா பண்டாரநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹாமாவட்டத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார் கடந்த 9ஆம் திகதி நடைபெற்ற கம்பஹா மாவட்ட ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது. [இ-க)

## மேல் மாகாண முதலமைச்சரின் அலுவலகம்

மேல் மாகாண முதல் அமைச்சரின் அலுவலகம் கொழும்பு சேர் மார்கஸ் பெர்னான்டோ மாவத்தையிலுள்ள சிராவஸ்தி கட்டடத்தில் தற்போது இயங்குகிறது.

முதல் அமைச்சர் சுசில் பிரேம்ஜயந் நேற்றுக்காலை இந்த அலுவலகத்தைத் திறந்து வைத்தார். (க]

# அரசின் சமாதானப் பேச்சு தோல்வி கண்டது ஏன்?

## விளக்குகிறார் ஐ. தே. கட்சி எம். பி.

கொழும்பு, ஓக 15

நாட்டின் 99 சதவீதமான மக்கள் சமாதானத்தை விரும்புகின்றனர் எனினும் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்த அரசு, அவர்களுடன் பேசுவதற்குத் தீர்வுத் திட்டம் எதனையும் கொண்டு செல்லாத வெறுங்கையுடன் சென்றதால் தான் அந்த முயற்சி தோல்வி கண்டது.

திகாமடுல்ல மாவட்ட ஐ. தே. க. உறுப்பினர் பி. தயாரத்ன நாடாளுமன்றில் இவ்வாறு தெரிவித்தார்.

புலிகளுடன் மேற் கொண்ட சமாதான முயற்சி தோல்வி கண்ட பின்னர் அவர்களை முற்றாக அழிக்கும் இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த முயற்சி வெற்றியளித்ததா என்றும் அவர் அங்கு கேள்வி எழுப்பினார். (ஒ-ஏ]

# மகாப்பொல புலமைப் பரிசு; விதிகள் தளர்த்தப்பட்டன

பல்கலைக்கழக மாணவருக்கான மகாப்பொல புலமைப்பரிசில்கள் வழங்கும் திட்டத்தில் சில விதிகள் தளர்த்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதன் படி—

வருடாந்தம் 90, ஆயிரம் ரூபா வருமானம்பெறும் பெற்றோர்களின் பிள்ளைகளும் அடுத்த வருடத்தில் இருந்து மகாப்பொல புலமைப் பரிசில் பெறத் தகுதி பெறுவர்.

இதுவரை வருடாந்தம் 48, ஆயிரம் ரூபாவுக்குக் குறைந்த வருமானம் பெறும் பெற்றோரின் பிள்ளைகள் மட்டுமே மகாபொல புலமைப் பரிசில் பெறத் தகுதியுடையவராக இருந்தனர்.

நேற்று முன்தினம் தென் மாகாணத்தில் உள்ள மாணவருக்குமகாப்பொலபரிசுகளை வழங்கும் போது கல்வி அமைச்சர் மேற்படி தகவலை வெளியிட்டார். [அ]

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்லின அல்சேஷன் நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: ந. வாகீசன் 639/1, நாவலர் வீதி, நல்லூர். (38015)

5½ குதிரை சக்தி [H. P.] கொண்ட பெற்றர் இயந்திரம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சி. கந்தசாமி, 82/7, 3ஆம் லேன், பருத்தித்துறை வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம். [8635]

குறைந்த விலையில் தேவையான அளவு இரண்டாம் தரத் தேங்காய்ப் பிண்ணாக்கு விற்பனைக்குண்டு. தொடர்பு: K. வீரசிங்கம், முருகன் எண்ணெய் ஆலை, மருதடி மேற்கு, சாவகச்சேரி. [38022]

நல்லினக் கோழிகள் வான்கோழி, தாராக்கள் விற்பனைக்குண்டு. விவாகப் பதிவாளர் இல்லம், இல. 17/4, ரெயில்வே வியூ off சோமசுந்தரம் ஒழுங்கை, கச்சேரியடி, சுண்டிக்குளி. (38031)

## விசேஷ அன்ரனா

ரூபவாஹினி, மட்றாஸ் நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு விசேஷ T. V. அன்ரனா பொருத்துதல், பழுதுபார்த்தல் T. V. செட், றேடியோ, மணிக்கூடுகளை திருத்திக் கொள்வதற்கு வீனஸ் டிக்காவாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி [ஆரியகுளம் சந்தி], யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-1975)

## வெற்றிக்கனி -3

வெற்றிக்கனி பகுதி-3 வெளிவந்து விற்பனையாகிறது. ஆக்கம் பொன் சக்திவேல் விலை ரூபா 60/- விற்பனை பூபாலசிங்கம் புத்தக நிலையம் யாழ்ப்பாணம், நல்லூர். உற்சவத்தை முன்னிட்டு எமது ஸ்தாபனம் நல்லூர் சிவன் கோவில் அருகில் திறக்கப்பட்டுள்ளது. (சி-2037)

## புதிய பாடத் திட்டம்

1997க்கான க. பொ. த. உயர்தரம் வணிகத்துறைக்கான முழுப்பாடத்திட்டம், பொருளியல், கணக்கியல், வர்த்தகம், புள்ளிவிவரவியல் ஆகிய பாடங்களை உள்ளடக்கியது. விற்பனையாகிறது பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-1999)

## யாழ். கோட்டை

யாழ்ப்பாணம் கோட்டையின் எழுச்சியையும் வீழ்ச்சியையும்விளக்கும் வரலாற்று ஆவணம் களம் பல கண்ட யாழ்—கோட்டை, அறிமுக விலை ரூபா 60/- நல்லூர் ஆலய வீதியில் உள்ள பூபாலசிங்கம், ஸ்ரீகாந், தமிழ்த்தாய் புத்தக சாலைகள். (37995)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

அரியரத்தினம் யோன் ராஜ்குமார் என்பவரது அடையாள அட்டை [இல. 682963409V] ஒரு தொகைப் பணத்துடன் பேர்ஸ் என்பன கைதடிப் பாலத்தடியில் கண்டெடுக்கப் பட்டுள்ளது. உரியவர்: திரு. க. பத்மநாதன் மே/பா க. யோகநாதன், மல்வம் உடுவில் எனும் முகவரியில் சான்றைக் காட்டிப் பெற்றுக்கொள்ளவும். (38012)

## இலகு திருமண சேவை

கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த அச்சுவினி, உதயச் செவ்வாய், 63 பாவம், 33 வயது, அழகிய மணப்பெண்ணுக்கு உயர்பதவி வகிக்கும் மணமகனைத் தேடுகிறார்கள். மணமக்களைத் தேர்ந்தெடுக்க நாடுங்கள்: விமலா, நாச்சிமார் கோவிலடி. (38029)

# இடம் பெயர்ந்த மாணவருக்கு

இராணுவ நடவடிக்கையினால் இடம் பெயர்ந்திருக்கும் — தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வுகளுக்குத் தோற்றும் — மாணவர்கள் தமது பாடசாலையிலோ அல்லது அண்மையில் உள்ள தேர்வு நிலையங்களிலோ தோற்றுவதற்கு இயலாத சூழ்நிலை இருப்பின் உடனடியாக — புதன் கிழமைக்கு முன்னர் — தத்தமது பாடசாலை அதிபரை அல்லது கோட்டக்கல்வி அலுவலரைச் சந்தித்துத் தாம் தோற்ற வாய்ப்பான இடம் பற்றித் தெரிவிக்குமாறு தேர்வு ஆணையாளர் அறிவித்துள்ளார். (உ)

அலரி மாளிகை பிரசாரம் பிரமாதம்

# 'முன்னேறிப் பாய்தல்' பற்றி நாட்டுக்கு திருப்திகர பதில் கிடைக்க வேண்டும்

## நாடாளுமன்றில் ரணில்

கொழும்பு, ஓக. 15

''முன்னேறிப் பாய்தல் நடவடிக்கை ஏன் தொடக்கப்பட்டது? மக்களின் கவனத்தைத் திசை திருப்பி விடுவதற்கான நடவடிக்கையே இதுவாகும். இதுபற்றி நாட்டுக்குத்திருப்திகரமான பதில் கிடைக்க வேண்டும்.''

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடந்த 9ஆம் திகதி நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்தியபோது இவ்வாறு வினாஎழுப்பினார்.

அவர் மேலும் கூறியதாவது;

முன்னேறிப் பாய்தல் நடவடிக்கை முன்னேற முடியாத பிரதேசம் என்றதோர் இடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. தமிழீழ விடுதலைப்புலிகள் உடனே எதிர் நடவடிக்கையில் இறங்கவில்லை அரச படைகளால் அவர்கள் நசுக்கப்பட்டு விட்டார்கள் என்று கருதப்பட்டது.

அலரி மாளிகை வெகுஜன சாதனங்கள் பிரமாதமாகப் பிரசாரம் செய்தன. தமிழீழ விடுதலைப்புலிகளின் எதிர்த்தாக்குதல் ஆரம்பித்ததும் வெகுஜன சாதனங்கள் மௌனம் சாதித்தன.

நாங்கள் ஒரு போர் விமானம், இன்னொரு விமானம், ஒரு தாய்க்கப்பல் ஆகிய வற்றை இரண்டு வார காலத்தில் இழந்தோம். 80உயிர்களையும் பறிகொடுத்வோம். 300 பேர் காயமுற்றனர். இதைத்தான் நிறைவேற்று ஜனாதிபதி முறைக்காகப் பலி கொடுத்த பிரங்கித் தீனி என்று நாம் கருதுகின்றோம் என்று ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

அவர் மேலும் பேசியதாவது:

கிழக்கில் படையினர் குறைந்து விட்டதால் பாதுகாப்பு வெற்றிடம் ஒன்று நிலவுகிறது. பல படையினர் வடக்குக்கு இடம் மாற்றப் பட்டுள்ளனர். கிழக்கு இப்போது தாக்கக்கூடிய இடமாகியுள்ளது.

பிரிகேடியர் அங்கம்மன வுக்கு முதல் கிழக்கில் சிரேஷ்ட இராணுவ அதிகாரி எவரும் இருக்கவில்லை. கிழக்கில் சிவில் நிர்வாகம் சீரழிவது பற்றி இராணுவ அதிகாரிகள் அரசாங்கத்துக்கு எச்சரித்துள்ளனர் என்றார் ரணில். [ம]

அதிகாரப் பரவலாக்கல் யோசனை;

# சுதந்திரக் கட்சி எம். பிக்கள் 40 பேர் கடும் எதிர்ப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் அரசாங்கத்தின் அதிகாரப் பரவலாக்க ஆலோசனைகளை ஒட்டி பலத்த கருத்து வேற்றுமைகள் நிலவுவதாக அறிய வருகின்றது.

கடந்த 10ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அமைப்பாளர்களுக்கும் ஆலோசனைகளை விளக்கிக் கூறும் கூட்டம் ஒன்றை நடத்தினார்.

ஜனாதிபதியின் வாசஸ்தலமான அலரிமாளிகையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், சுமார் 40 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆலோசனைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்ததாகத் தெரியவருகிறது.

ஜனாதிபதியின் தீர்வு ஆலோசனை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதற்கு முன் பெரிய மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்று ஆளும்கட்சி உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர் எனவும் அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

தனது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் முழு ஒத்துழைப்புத் தனக்குக் கிடைக்காவிட்டால் தான் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு புதிய தேர்தல் நடத்துவார் என்று ஜனாதிபதி சந்திரிகா அச்சுறுத்துவார் என்று ஊகிக்கப்படுகிறது. [ஓ-க]

# வெளிநாட்டுப் பார்சல் கட்டணம் அதிகரிப்பு

இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் வான் வழி மற்றும் கடல் வழி பார்சல்களுக்கான தபால் கட்டணம் இன்று செவ்வாய்க்கிழமை முதல் அதிகரிக்கும்.

வெளிநாட்டு பார்சல்களுக்கான முத்திரைக் கட்டணம் 10 முதல் 15 சத வீதம் வரை அதிகரிக்கப்படும் என்று தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அனைத்துலக தபால் ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகள் அனைத்தும் பொதுவாக வெளிநாட்டுத் தபால் கட்டணங்களை அதிகரித்துள்ளன என்று திணைக்கள அதிகாரி ஒருவர் சுட்டிக்காட்டினார்.

இருந்த போதிலும் கடிதங்களுக்கான முத்திரைக் கட்டணம் அதிகரிக்கப்பட மாட்டாது. என்றும் அவர் கூறினார். (ஓ-4)

# சென்னையில் ஈழ வாலிபர் கைது!

கொழும்பில் இருந்து சென்ற தமிழ் இளைஞர் ஒருவர் சென்னை விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

27 வயதான ரவிச்சந்திரன் என்ற இந்த இளைஞரை போலி விஸா வைத்திருந்ததாகக் கூறியே பொலீஸார் கைது செய்தனர்.

# அச்சுக்கூட உபகரணங்கள் கொள்வனவுக்கான கேள்விப் பத்திரம்

கிளிநொச்சி மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு தரமான அச்சுக்கூடம் ஒன்றிற்குரிய முழு உபகரணங்களும் (இயந்திரங்கள் உட்பட) கேள்விப்பத்திரம் மூலம் கோரப்படுகின்றது. தரமான அச்சுக்கூட உபகரணங்கள் இருப்பின் 30-08-95ற்கு முன்னதாக

**அச்சுக்கூட உபகரண கேள்விப் பத்திரம்**
மே/பா யாழ்ப்பாண மாவட்ட சி. க. கூ. சமாசம்
182 1/4 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்புமாறு வேண்டுகின்றோம்.

மாவட்ட செயலாளர்,
கிளி/மாவட்ட சி. க. கூ. சங்கங்களின் சமாசம்,
கிளிநொச்சி.

(38032)

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 07 — 10 — 1926

இறப்பு: 27 — 07 — 1994

**அமரர் அமரசிங்கம் நாகராஜா**
(Retired Anti Malaria Field Assistant)

திதி: 15 – 08 – 1995

காலம் ஓர் ஆண்டு கணமாக கழிந்திட்டது
வெளியே போய் வருகிறேன் என்று சென்றீரே ஐயா
எம்மை தவிக்க விட்டு எங்கு சென்றீர்கள்.........?
அன்பாக பெற்று வளர்த்த செல்வங்கள்,
பேரப்பிள்ளைகள்
இவர்களின் இன்பங்கள் இன்னும் காண இருக்க
சடுதியாய் தேவியின் தாள் சரண் அடைந்தீரே
கலங்கிய கண்கள் கவலையால் வாட
தேற்றுவாரின்றி கலங்குகிறோம் ஐயா
குடும்பத்தில் ஒளிவீசின பாச விளக்கே
உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும் இறைவனைப்
பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சுற்றத்தார்.

வோட்டன் வீதி,
மானிப்பாய்.

(37993)

# பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டம்
நாளை (16 - 08 - 95) புதன்கிழமை
காலை 10 - 00 மணிக்கு
நாவலர் கலாசார மண்டபத்தில்
நடைபெறும்

என்பதை அறியத்தருகின்றோம். சகல அங்கத்தவரையும் தவறாது இக்கூட்டத்திற்கு சமுகம் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி.

மு. சி. சண்முகராசா.
செயலாளர்.

வடமாகாண அரசாங்க ஒப்பந்தகார சங்கம்,
கண்டி வீதி, யாழ்ப்பாணம். (சி-2030)

உதயன்
29/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## கபடமும் கயமையும்

அரசு முன்வைத்துள்ள தீர்வு யோசனையின் சிறப்பம்சங்களில் ஒன்று எனப் பெரிதாகப் பீற்றப்பட்ட பிராந்திய சபைகளை கலைப்பது தொடர்பான அம்சம் மாற்றப்படும் என்று அமைச்சர் பீரிஸ் அறிவித்துள்ளார். உத்தேச சபைகளைக் கலைப்பதற்கு மத்திய அரசுக்கு அதிகாரம் வழங்கப்படும் என்று அவர் கூறியிருக்கிறார்.

அதேபோல வடக்கு-கிழக்கு இணைப்பு ஒன்று இருக்க மாட்டாது என்றும் அமைச்சர் பீரிஸ் அறிவித்துள்ளார்.

இவ்வாறே முரண்பாடான, பிரச்சினைக்குரிய அம்சங்கள் தீர்வில் இருந்து மெது மெதுவாக, படிப்படியாகக் கழற்றப்படும் என்பதில் இனி என்ன சந்தேகம்?

இத்தகைய நிலையில் தீர்வு யோசனையை வரவேற்றும் சிலாகித்தும் கருத்து வெளியிட்டுவரும் கொழும்புத் தமிழ்க் கட்சிகள், தமிழ்க் குழுக்கள் என்ன செய்யப் போகின்றன?

பொய்ப்பிரசாரத்திலும், போலித்தனத்திலும் சந்திரிகா வெகு சாமர்த்தியசாலி என்பது தமிழ் மக்களுக்கு நன்றாக, அணு அளவு சந்தேகமும் இன்றி இப்போது புரிந்து விட்டது.

தமிழர் பிரச்சினைக்கு உகந்த தீர்வு ஒன்றைத் தாம் கொண்டு வந்திருப்பதாகவும், விடுதலைப் புலிகளைத் தவிர ஏனைய தமிழர் தரப்பினர் அதனை வரவேற்பதாகவும், ஆதரிப்பதாகவும் காட்டுவது சந்திரிகாவின் நோக்கம்.

அவர் அந்த நோக்கத்தில் வெற்றி ஈட்டிவிட்டார் என்பதும் உண்மை. வெளிநாடுகள் பல ஸ்ரீலங்கா அரசு நடத்தும் போருக்கு ஆயுதங்களை வழங்க முன்வந்திருப்பது சந்திரிகாவின் வெற்றிக்கு அத்தாட்சி.

சந்திரிகா முன்வைத்த தீர்வு யோசனையை துள்ளிக் குதித்து வரவேற்று முன்னேற்றகரமானது, முக்கியமானது என்று தாம் விமர்சிப்பதன் மூலம் தாங்கள் பிரதிநிதித்துவம் செய்வதாக சொல்லிக் கொள்ளும் தமிழ் மக்களே அழிக்கப்படுகிறார்கள் என்பதனை அறிந்து கொள்ளும் மத்திம புத்தியாவது தமிழ்க் கட்சிகளுக்கு இல்லையா?

போரை நடத்தி தமிழர்களை கொன்றொழித்துவரும் அரசாங்கம், தமிழர்களின் மனங்களை வென்று அவர்களின் ஆதரவைப் பெறப் போவதாகக் கூறும் கபடத்தனத்துக்கும் —

தீர்வு யோசனையை தாம் ஆதரிப்பதன் மூலம், ஆயுதங்களைப் பெற்று தமிழர்களை அழிப்பதற்கு சந்திரிகாவுக்கு உதவுவோரின் — கொழும்புத் தமிழ் அரசியல்வாதிகளின் — கயமைத் தனத்துக்கும் என்ன வித்தியாசம்?

தமிழர் தாயகத்தில் அரச படைகளால் நடத்தப்படும் இனப் படுகொலைக்கு மூல காரணர்களே தமிழ் அரசியல் வாதிகள் எனக் கூறப்படுவோர் தான்! இவர்களைப் பகடைக் காய்களாகப் பயன்படுத்தி சண்டாளத்தனம் புரிவதற்காகவே, சந்திரிகா தீர்வு யோசனையை முன்வைத்திருக்கிறார்! தீர்வைக் கொண்டு வருவதற்கல்ல!

# தீர்வை காகிதத்தில் எழுதுவது இலகு; செயற்படுத்துவது தான் முக்கியம்

## தொண்டா சொல்கிறர்

கொழும்பு, ஓக. 15

தீர்வு யோசனை எதனையும் காகிதத்தில் வெளியிடலாம்; அது இலகுவானது. ஆனால் அதனைச் செயற்படுத்துவது தான் முக்கியம்.

இவ்வாறு தெரிவித்தார் அமைச்சர் தொண்டமான்.

''சண்டே லீடர்'' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

அதிகாரப் பரவலாக்கலுடன் கூடிய தீர்வு யோசனை ஒன்றை முன்வைத்த ஜனாதிபதியின் துணிவான— துணிச்சலான — நடவடிக்கையை நான் வரவேற்கிறேன்.

ஆனால் பண்டா —செல்வா ஒப்பந்தத்துக்கோ அல்லது அது போன்ற ஏனைய உடன்படிக்கைகளுக்கோ ஏற்பட்ட கதி மீண்டும் ஏற்படக் கூடாது என நான் எதிர்பார்க்கிறேன்.

பல ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. ஆனால் அவை செயற்படுத்தப் படவில்லை என்பது தான் எமக்குக் கிடைத்த அனுபவங்களாகும்.

எந்தத் தீர்வு யோசனையையும் காகிதத்தில் வெளியிடலாம்; அது இலகுவானது. ஆனால் செயற்படுத்துவது தான் முக்கியம்.

இந்த நோக்குடன் தான் தீர்வு தொடர்பான எனது யோசனைகளை முன் வைத்தேன்.

ஜனாதிபதி என்ற முறையில் எனது தீர்வு யோசனைகளை சந்திரிகா ஏற்கலாம்; அல்லது விடலாம். ஆனால் எமது எண்ணம் என்னவென்பதை அரசுக்குத் தெரிவிப்பது தான் முக்கியம்.

நாம் சமர்ப்பிக்கும் யோசனைகள் எல்லாம் ஏற்றுக் கொள்ளப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்பதல்ல.

### மலையகத் தமிழருக்கு தனிச்சபை

கேள்வி:- மலையகத் தமிழர்களுக்கு தனியான சபை வேண்டும் எனக் கேட்டுள்ளீர்கள். வடக்கு - கிழக்கில் தமிழர். முஸ்லிம்களுக்கு பிராந்திய சபைகள் அமையுமாயின் மலையகத் தமிழர்களுக்கு தனிச்சபை வேண்டும் என்ற உங்கள் கோரிக்கையை வலியுறுத்துவீர்களா?

தொண்டா:- ஐம்பதாண்டுகளுக்கு முன்னர் வடக்கு — கிழக்கில் குடியேறிய மக்களுக்கு தனியான சபைஒன்றை வழங்குவதில் அரசு ஈடுபாடு காட்டுமானால் மலையகத்தில் இருநூறு ஆண்டுகளாக வாழும் மக்களுக்கு தனிச்சபை கோருவதில் என்ன தவறு? இதுதான் எனது கோரிக்கையின் அடிப்படை.

எனவே இந்த விடயத்தை அரசமைப்பு தெரிவுக்குழு உறுப்பினன் என்ற முறையில் அங்கு எழுப்புவேன்.

கேள்வி:- நீங்கள் புலிகளைத் தட்டிக் கொடுப்பதாகவும், புலிகளுக்கு சார்பாக நடப்பதாகவும் கூறப்படுகின்றதே. அதில் உண்மையுண்டா?

தொண்டா:- எந்தக் கட்சிக்கும் நான் சார்பானவன் அல்லன். பாதிக்கப்பட்ட எந்தக் குழுவின் சார்பிலும் நான் பேசுவேன் தமிழ் மக்கள் மீது மட்டும் என்றல்ல — துன்புறுத்தப்படும் எந்த மக்கள் மீதும் நான் அனுதாபம் கொண்டுள்ளேன்.

### நடுவர் தேவையில்லை

கேள்வி:- விடுதலைப்புலிகளை பேச்சுவார்த்தை மேடைக்கு கொண்டு வந்து சமாதான முன்முயற்சிகளை ஆரம்பிக்க அல்லது இணக்கமான தீர்வு ஏற்பட இடையில் நடுவர் ஒருவர் தேவை எனக் கருதுகிறீர்களா?.

தொண்டா:- எந்தச் சூழ்நிலையின் கீழும் — எச்சந்தர்ப்பத்திலும் — சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கக் கூடிய துணிச்சல்மிக்க ஜனாதிபதியை நாம் கொண்டிருக்கும் போது அத்தகைய நடுவர் தேவையில்லை என்றே நான் கருதுகிறேன்.

தலைமைத்துவம் பலவீனமுற்றிருக்கும் போது தான் நடுவர்கள் தேவைப்படுவார்கள்.

கேள்வி:- நடுவராகச் செயற்பட நீங்களாகவே முன் வருவீர்களா?.

தொண்டா:- அத்தகைய நிலையை எட்டக்கூடிய அதிகாரம் மிக்கவனாக நான் இருப்பதாக நினைக்கவில்லை.

ஆனால் நாம் அனைவரும் சமாதானத்தை எட்ட கூட்டாகச் செயற்பட வேண்டும் என்பதை நான் உணர்கிறேன். [அ-உ]

# பேசாலையில் பொலீஸார் தமிழர்கள் மீது வன்முறை

கடந்த சனியன்று மன்னாரில் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் புகுந்த ஸ்ரீலங்கா பொலீஸார் அங்குள்ள தமிழ் மக்கள் மீது வன்முறைத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

மன்னார்த்தீவில் தமிழ் மக்கள் செறிந்துள்ள பேசாலைப் பகுதியில் பொலீஸார் தமிழர்களின் 10 கடைகளை எரித்துள்ளனர்.

கடற்கரையில் நின்ற 7 மீன்பிடிப் படகுகளையும் மிக மோசமாக தாக்கி சேதமாக்கியுள்ளனர்.

இவற்றில் 5 படகுகள் எரிந்து நாசமாகியுள்ளன.

இத்தாக்குதலில் பொது மக்கள் பலர் காயமடைந்தனர். [உ-3-6]

# மேலும் 19 பேருக்கு மேஜர் ஜெனரல் பதவி

## ஒருவர் மன நோயாளியாம்

கொழும்பு, ஓக. 15

ஸ்ரீலங்கா இராணுவத்தின் மேஜர் ஜெனரல்களின் எண்ணிக்கை 16 இலிருந்து 35 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஓய்வு பெற்ற அல்லது மருத்துவ ரீதியில் தகுதியற்ற விலகிய இராணுவ அதிகாரிகள் 19 பேருக்கு மேஜர் ஜெனரல்களாகப் பதவி உயர்வு வழங்கியுள்ளார்.

ஓகஸ்ட் 14 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் இது பற்றிய அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த எண்ணிக்கை வளைகுடாவில் 1991 இல் இடம்பெற்ற ''பாலைவனப் புயல்'' நடவடிக்கையின் போது ஈராக் ஐ. நா. இரண்டினதும் மேஜர் ஜெனரல்களின் எண்ணிக்கையிலும் பார்க்கக் கூடுதலானது என்று பாதுகாப்புப் பார்வையாளர்கள் கருதுகின்கிறார்கள்.

இதன்படி போர் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு 2,000 படையினருக்கும் ஒரு மேஜர் ஜெனரல் இருப்பார்.

இப்பொழுது ஜனாதிபதி சந்திரிகாவிடமிருந்து ஒரே தடவையில் இரட்டை, மும்முறைப் பதவி உயர்வு பெற்றவர்களில் அநேகர் 1993 பொதுத்தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அமைப்பாளர்களாகப் பணி புரிந்தவர்கள் என ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த டாக்டர் சரத் அமுனுகம சுட்டிக் காட்டியுள்ளார்.

ஒரே தடவையில் மும்முறைப் பதவி உயர்வு பெற்ற ஓர் இராணுவ அதிகாரி, மருத்துவ சபையால் மன நோயாளி என்று கூறி ஓய்வு அளிக்கப்பட்டவர் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தரத்வத்தையின் தனிப்பட்ட உதவியாளரான எஸ். கே. ஹீலங்கமுகவும் பதவி உயர்வு பெற்ற அதிகாரிகளில் ஒருவர் ஆவார்.

14 ஆண்டுகளுக்கு முன்னர் கப்டனாக இருந்தபோது ஓய்வு பெற்ற இவர் தற்போது சேவைக்கு அழைக்கப்பட்டு பிரிகேடியர் ஜெனரலாக நியமிக்கப்பட்டுள்ளார்.

பெரிதும் எதிர்பார்க்கப்படும் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான இறுதிச் சமருக்கு முன் இராணுவத்தை வலுப்படுத்தவே ஜனாதிபதி இந்த இராணுவ ''முனை''களைச் சேர்த்துக்கொள்கின்றார் என்று அரசாங்க வட்டாரங்களில் கூறப்படுவதாக சண்டேலீடர் ஆங்கில வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது. (இ-ச)

## மருந்து விற்பனை லைசென்ஸ்

யாழ்ப்பாணம், ஓக. 15

யாழ். குடாநாட்டிலுள்ள சகல ஆங்கில, சுதேச மருந்து விற்பனை நிலையங்களும் 1995 ஆம் ஆண்டுக்கான விற்பனை அனுமதியை (லைசென்ஸ்) பெற்றுக்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளன.

யாழ். இலங்கோ வீதியில் (மணிக்கூட்டு கோபுர வீதி) உள்ள 6/2 இலக்க தமிழீழ சுகாதார சேவைகள் பணியகத்தில் இதற்கான விண்ணப்பப் படிவங்களை இன்று செவ்வாய்க்கிழமை முதல் பெற முடியும் என்றும்—

இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அவை பூர்த்தி செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் — தமிழீழ சுகாதார சேவைகளின் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். (இ)

## வடக்கிற்கு பயிற்சி பெற்ற பொலீஸாம்

கொழும்பு, ஓக. 15

வட மாகாணத்தில் உள்ள பொலீஸ் நிலையங்களுக்கு முற்றிலும் பயிற்சி பெற்ற பொலீஸ் பிளட்டூன் ஒன்று அனுப்பப்படும் என்று பொலீஸ்மா அதிபர் ஈ. பி. ராஜகுரு கூறியுள்ளார்.

முதல் கட்டமாக பலாலி, காங்கேசன் துறை, ஊர்காவற்றுறை மாதகல் முதலிய பொலீஸ் நிலையங்களுக்கு கூடுதல் பொலீஸாரை அனுப்பத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (இ-ச)

## வடக்கே...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தாயினும் அது குறித்து எடுக்கப்பட்ட முடிவுகள் நேற்று மாலை வரை யாழ்ப்பாணத்துக்குத் தெரியவரவில்லை.

இந்த புதிய உடன்பாட்டு நகல் குறித்து கடந்த வாரம் விடுதலைப் புலிகளுக்கும், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் இடம் பெற்றிருந்தன.

இவ்வார இறுதிக்குள் இவ் விடயத்தில் சாதகமானமுடிவு ஏற்படும் என்று நம்பிக்கை வெளியிடப்பட்டது.

## நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்

### நின்செவிக்கு கேட்கலையோ!

தாளம்: ஆதி இராகம்: ஹம்சத்வனி

எடுப்பு

நல்லை நகருறையும் வல்ல வடிவேலனே
தொல்லைகள் தீர்த்தருள்வாய் —தொழும் அடியார்

தொடுப்பு

வள்ளி தெய்வயானை சூழ வலம் வந்து
அள்ளி அருள் பொழியும் நல்லை நகர்க்கந்தா

முடிப்பு

சொத்து சுகமிழந்து சொந்தங்களுந் தானிழந்து
எத்திக்கு செல்வதென்று ஏங்கித் தவித்திங்கு
நித்தமுனை வேண்டுகிறோம் நின்செவிக்குக் -
கேட்கலையோ
முத்தமிழின் தெய்வமே எம்முருகனே முன் வருவாய்
(நல்லை நகருறையும்)

— அன்னைதாசன்

### நல்வழி காட்டுவாய்!

நல்லைத் திரு நகரின் நாயகா
நாளும் உளம்நிறை வேலவா!
தொல்லை வினை நீக்கும் தூயவா
தொடரும் வினைபோக்கும் புண்ணியா!
இல்லை இனி இங்கு துன்பமே
என்றின்ப வாழ்வு நீநல்கி
வல்ல நல் வழியினைக் காட்டிடு
வந்துநாம் உன்தனைப் போற்றுவோம்!

— மாணிக்க லீலாவிநோதன்

# புலிகளை ஒதுக்கிவிட்டு தீர்வு காணமுடியாது!

## அமைச்சர் அலவி கூறுகின்றார்

கொழும்பு, ஒக.15

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டுமானால் விடுதலைப் புலிகளை ஓரம் கட்டி அரசு செயற்பட முடியாது.

தகவல்துறை பிரதி அமைச்சரும், தொழிற் சங்கவாதியுமான அலவி மௌலானா பி. பி. ஸி. சிங்கள சேவைக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே இவ்வாறு கருத்து தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தை சட்ட ரீதியாகத் தடை செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்காததில் இருந்து அவர்களைப் பங்காளிகளாக்க கருதும் அரசின் போக்கை ஓரளவு அவதானிக்கலாம் என்றும் அவர் கூறினார். (உ-8-6)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சின்னாச்சிப்பிள்ளை சுப்பிரமணியம் (மம்மி)

கரும்பனையை பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்தவருமாகிய திருமதி சின்னாச்சிப்பிள்ளை சுப்பிரமணியம் அவர்கள் 14-8-1995 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற பொன்னம்பலம் சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், புஸ்பராணி [லண்டன்], கமலராணி [நமிபியா], இந்திராணி, கணேசசெல்வம் [பிரான்ஸ்], தனபாலகுமாரன் [லண்டன்], ஞானசேகரன் [லண்டன்], பத்மநாதன் [லண்டன்], பத்மராணி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், தியாகலிங்கம், ரமணானந்தன் [நமிபியா] இராஜரட்னம், தேவகி, ரஞ்சி, அம்பாபிள்ளை [லண்டன்] ஆகியோரின் அன்பு மாமியாரும், அம்பலவாணர், திருமதி செல்லம்மா துரைசிங்கம், செல்வி சரஸ்வதி மயில்வாகனம் [ஆசிரியை], சிற்றம்பலம், நாகநாதன் ஆகியோரின் சகோதரியும், துரைசிங்கம் அவர்களின் மைத்துனியும், பிருந்தா, உஷாந்தி, தவாணி ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

திருமதி. இ. இந்திராணி [மகள்]

விநாயகர் வீதி,
சந்திரசேகரப்பிள்ளையார் கோவிலடி,
நல்லூர் வடக்கு,
கல்வியங்காடு. [38040]

## விநாசித்தம்பி அம்பலவாணர்

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த விநாசித்தம்பி அம்பலவாணர் நேற்று 14-08-95 காலை காலமானார்.

அன்னார் இலட்சுமியின் அன்புக் கணவரும், இராசயோகமலர் [லண்டன்], உருத்திராதேவி [கனடா], ரவீந்திரன், சாந்தினிதேவி (கனடா), வசந்தினி [லண்டன்], ஆகியோரின் அன்புத் தந்தையும் காலம் சென்ற இராசேந்திரா [லண்டன்], புவனேந்திரன் [கனடா], கௌரியம்பாள், ஆனந்தராசா [கனடா], மகாலிங்கம் [லண்டன்], ஆகியோரின் மாமனாரும் மிருணாளினி, ரகுபரன், தர்சன், ஆரணி, சுகந்தன், ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்துக்கு இன்று 15-08-95 காலை 11-00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

ரவி

கோப்பாய் சந்தி,
கோப்பாய். (38034]

## JAMES BALASINGAM WORTHINGTON

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. ஜேம்ஸ் பாலசிங்கம் வேர்திங்ரன் 04-08-1995 இல் லண்டனில் காலமானார்.

அன்னார் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்ற ஜோன் வேர்திங்ரன் கிறேஸ் நேசம்மாவின் அருமை மகனும், இராசமணியின் அன்புக் கணவனும், தவராஜசிங்கம் [அவுஸ்திரேலியா], செகராஜசிங்கம் [லண்டன்] ஆகியோரின் தந்தையும், தவரட்ணராணி தம்பிராஜா, R. R. வேர்திங்ரன் [சிங்கப்பூர்], காலஞ்சென்ற A. E. வேர்திங்ரன், காலஞ்சென்ற W. J. வேர்திங்ரன், டெய்சி பூமலர் இராஜரட்ணம் [லண்டன்], காலஞ்சென்ற பிரின்சி சரோஜினி ஜெயராசா, காலஞ்சென்ற பொன்ராஜசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;

G. P. JEYARAJAH (மைத்துனன்)

பிரதான வீதி,
வட்டுக்கோட்டை. [8637]

# பீரிஸுக்கு வயது 49

கொழும்பு, ஓக. 15

அரசமைப்பு விவகார, நீதித்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தமது 49 ஆவது பிறந்த தினத்தை கடந்த ஞாயிற்றுக்கிழமை கொண்டாடினார். [அ]

## 8,000 தமிழர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒட்டி அதில் பங்கு பற்றும் பிரதிநிதிகளை ஈர்க்கும் வகையில் இப் பேரணி நடத்தப்பட்டது.

அத்துணைக் குழுவின் தலைவர் மற்றும் அங்கத்தவர்களுக்கு பேரணியின் முடிவில் மகஜர்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

இலங்கையில் தமிழர்கள் மீதான தாக்குதல் தொடர்வதால் சுவிஸில் உள்ள தமிழர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்பவேண்டாம் என்றும்—

யுத்த நிறுத்தம் கொண்டு வந்து, விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சைத் தொடங்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா அரசுக்கு ஐ. நா. அழுத்தம் கொடுக்கவேண்டும் என்றும்—

மேற்படி மகஜரில் கோரப்பட்டுள்ளதாக பேரணியில் பங்கு கொண்ட ஸ்ரீலங்கா ரூபவாஹினிக் கூட்டுஸ்தாபன முன்னாள் தலைவர் வசந்த ராஜா பி. பி. ஸி. சிங்கள சேவைக்குத் தெரிவித்தார். (உ-3-6)

## பாட்டாளி..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் இந்திய மீனவர்கள் அங்கு தங்கி, தமது வலைகளை உலரவைப்பதற்கு இலங்கை தடை ஏதும் விதிக்கக் கூடாது என்று இரு தலைவர்களும் உடன்பாடு கண்டிருந்தனர்.

ஆனால் —

இலங்கையில் தமிழீழப் போர் ஆரம்பமானதை அடுத்து —

கச்சதீவுக்கு எந்த நாட்டு மீனவர்கள் செல்வதையும் தடுத்து வந்த ஸ்ரீலங்காப் படையினர் அப்பகுதியில் கடற் தொழிலில் ஈடுபடும் ஈழத்து. தமிழக மீனவர்களையும் அவ்வப்போது சுட்டுக் கொன்று வந்தனர்.

இதனால் தமிழகத்தில் பெரும் உணர்வு அலைகள் ஏற்பட்டிருந்த வேளையிலேயே கச்சதீவை மீட்கும் போராட்டத்தை பாட்டாளி மக்கள் கட்சி அறிவித்திருக்கிறது.

கச்சதீவில் இந்தியக் கொடியை ஏற்றச் செல்லும் ஊர்வலத்தில் பங்கு கொள்வதற்கு வரும் கட்சி தொண்டர்களுக்கும், தமிழார்வம் கொண்டவர்களுக்கும் தாம் தலைமை ஏற்று இந்நடவடிக்கையை மேற்கொள்ளப்போவதாக பாட்டாளி மக்கள் கட்சித்தலைவர் டாக்டர் ராமதாஸ் அறிவித்துள்ளார்.

இலங்கையிடம் இருந்து அந்தத் தீவை மீட்க நீண்ட காலமாக அரசியல் கட்சிகளும் மீனவர்களும் விடுத்து வரும் கோரிக்கைக்கு வலுவூட்டுவதே தமது இந்த நடவடிக்கையின் நோக்கம் என்றும் அவர் சொன்னார். (உ-3-6)

## உணவுப்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இதேவேளை —

உணவுப் பொருள்கள் போதியளவு கையிருப்பில் இல்லாத காரணத்தால் இடம் பெயர்ந்தோருக்கு கடந்த 8 வாரங்களாக நிவாரணம் வழங்கப்படவில்லை எனவும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-3)

## மட்டக்களப்பில்---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ரவைக் கூடுகள் — 17, கைக்குண்டுகள் — 6, நடுத்தர ரவைகள் — 544, தொடர்பு சாதனம் — 1, மேலதிக மின்கலம்— 1, மற்றும் தொலைக்காட்டி. (உ-3]

# தீர்வு யோசனையை ஐ.தே.க. ஏற்காது!

அரசாங்கம் முன்வைத்துள்ள தீர்வு யோசனையை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கியதேசியக் கட்சி அனேகமாக ஏற்றுக்கொள்ள மாட்டாது என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஒற்றையாட்சி முறையை மாற்றும் எந்தத் தீர்வுக்கும் ஆதரவளிக்கும் நிலையில் ஐ தே. கட்சி இல்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக்கூட்டம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றபோது, அரசின் தீர்வு யோசனையைக் கண்டித்தே எம்.பிக்கள் பலரும் கருத்து வெளியிட்டனர்.

தீர்வு யோசனையை ஆதரிப்பதா இல்லையா என்பது குறித்து இறுதி முடிவு எடுக்கும் பொறுப்பு கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவிடமே விடப்பட்டது. ஆனால் இது விடயத்தில் சில காலத்துக்கு அமைதியைக் கடைப்பிடிக்க ரணில் முடிவு செய்திருப்பதாக அறியப்படுகிறது.

ஒற்றையாட்சிக்கு பங்கம் இல்லாத விதத்தில் தீர்வு யோசனை திருத்தப்பட்டால் மட்டுமே ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு வழங்குவது குறித்துப் பரிசீலனை செய்யும் என்றும் சொல்லப்படுகிறது. [அ]

# தீர்வுத் திட்டத்தை எதிர்த்து லண்டன் சிங்களவர் பேரணி

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக ஸ்ரீலங்கா அரசு வெளியிட்டுள்ள யோசனைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து லண்டனில் உள்ள சிங்கள மக்கள் கடந்த புதனன்று அங்குள்ள இலங்கைத் தூதரகத்தின் முன்னால் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

சந்திரிகா அரசுக்கு எதிரான பதாகைகள் இப்பேரணியில் எடுத்துச் செல்லப்பட்டன.

ஸ்ரீலங்காவிலிருந்து லண்டனுக்குச் சென்றிருந்த பேராசிரியர் நளின் டி சில்வாவும் பேரணியில் பங்குபற்றினார். (உ-10)

# முன்னேறிப் பாய்தலில் தோல்வியுற்றது ஏன்?

## படையினர் பிரேத பரிசோதனை

கொழும்பு, ஒக 15

"முன்னேறிப் பாய்தல்" இராணுவ நடவடிக்கை தோல்வி அடைந்தது ஏன்? —

இது குறித்து இராணுவ உயர் வட்டாரங்கள் 'பிரேத பரிசோதனை' நடத்தி வருவதாக பாதுகாப்புச் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அதிலும் குறிப்பாக இந்தத் தோல்வி நடவடிக்கையின் போது விடுதலைப்புலிகள் பல கோடிக்கணக்கான பெறுமதியுள்ள பெருந்தொகை ஆயுதங்களைக் கைப்பற்றியது எவ்வாறுஎன்பது குறித்து விரிவான விசாரணை நடத்த வேண்டும் என்று பாதுகாப்புச் சபை சிபார்சு செய்திருக்கிறது.

"முன்னேறிப் பாய்தல்" தோல்வியில் முடிந்த பின்னரும் விடுதலைப்புலிகள் பெருந் தொகையான ஆயுதங்களை அள்ளிச் சென்றது எப்படி என்பது குறித்தும் விசாரிக்கப்பட உள்ளதாம். [அ]

# மணலாறு படைத்தளபதி வடக்கிற்கு மாற்றப்படுவார்?

மணலாறு இராணுவ கூட்டு முகாமுக்குப் பொறுப்பான பிரிகேடியர் ஜானக பெரேராவை வடக்குப் போர் முனைக்குத் தலைமை வகிக்க அனுப்புவது குறித்து பாதுகாப்புச் சபை ஆராய்ந்துள்ளது.

விடுதலைப் புலிகளின் தாக்குதலை முறியடித்த அவரை வடக்குப் போர் முனைக்கு அனுப்புவதால் நல்ல பெறுபேறை அடையலாம் என்று பாதுகாப்புச் சபையின் சமீபத்திய கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டதாம்.

இது விடயத்தில் விரைவில் முடிவு எடுக்கப்பட்டு மணலாறுக்கு பிரிகேடியர் வசந்தா பெரேரா அனுப்பப்படுவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# இலகு விமானம் ஒன்றை புலிகள் பொருத்துகின்றனர்

இலகு விமானம் ஒன்றைப் பொருத்துவதில் விடுதலைப் புலிகள் இப்போது தீவிரமாகச் செயற்பட்டு வருவதாக இராணுவப் புலனாய்வுப் பகுதிக்குத் தகவல் கிடைத்துள்ளதாம்.

கிளிநொச்சியில் உள்ள போக்குவரத்துச் சபை டிப்போவுக்குப் பின்னால் வைத்து விமானத்தைப் பொருத்தும் வேலையில் பதினொரு பொறியியலாளர்கள் பணிபுரிந்து வருவதாகவும் புலனாய்வுத் தகவல்கள் தெரிவிப்பதாக 'சண்டே லீடர்' பாதுகாப்புச் செய்தியாளர் தெரிவிக்கிறார். [அ)

# "முன்னேறிப் பாய்தல்" 2 ஆம் கட்டம் அடுத்தமாதம்

கொழும்பு, ஒக. 15

"முன்னேறிப் பாய்தல்" இராணுவ நடவடிக்கையின் இரண்டாவது கட்டத்தை செப்டம்பர் மாதத்தின் முதல் வாரத்தில் இராணுவத்தினர் ஆரம்பிப்பர் என்று 'சண்டே லீடர்'' பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கிறது.

தேவையான ஆயுதங்களும், ஆயுத தளபாடங்களும் வெளிநாடுகளில் இருந்து வந்து சேரும் வரையே இராணுவம் காத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, வடக்கின் யுத்த தளங்களில் பணிபுரியும் உயர் அதிகாரிகள் கடந்த வாரம் கொழும்புக்கு அழைக்கப்பட்டு ஜூலை மாதத்துத் தோல்வி குறித்து விரிவாக ஆராயப்பட்டதோடு—

இரண்டாவது கட்ட நடவடிக்கைக்கான ஆயுதங்களைச் செய்வது குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

வடக்கில் ஏற்கனவே பணிபுரிந்த அதிகாரிகளை மீண்டும் அங்கு அனுப்புவது குறித்தும் விவாதிக்கப்பட்டது. (அ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 15-08-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.